**Date**: 03.03.2021

**DVA** 532/2019

ம.சா. 1 அகிலாண்டேஸ்வரி

சாட்சி ஆஜர், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் சைட் எண் 15, சிருஷ்டி என்க்ளேவ், அன்பு நகர் கோவை, மதுக்கரை மார்க்கெட். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி .காம் படித்துள்ளேன். என் திருமணத்தின் போது என் வயது என்ன என்றால் 33. திருமணத்திற்கு முன்பு டிட்டிடிசி கம்பெனியில் வேலை பார்த்து வந்தேனா என்றால் சரிதான் . அப்போது எனக்கு ரூ. 5,000/- சம்பளம் வந்ததா என்றால் இல்லை. கொரியரில் அவ்வளவு சம்பளம் தர மாட்டார்கள். ரூ. 3, 500/- தான் சம்பளம் கொடுத்தார்கள். என் திருமணத்திற்கு முன்பு என் தாயார் வேலைக்கு சென்றாரா என்றால் இல்லை . எப்போதுமேஅவர் வேலைக்கு சென்றதில்லை. என் தகப்பனார் என் திருமணத்திற்கு முன்பு கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் வேலை பார்த்து வந்தாதா என்றால் ஆமாம் . செக்யூரிட்டியாக வேலை பார்த்து வந்தார். அவரின் மாத சம்பளம் எவ்வளவு என்றால் வேலையைப் பொறுத்து ரூ. 5,000/- முதல் ரூ. 6,000/- வரும். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு தம்பி மற்றும் ஒரு தங்கை. தங்கையின் பெயர் என்ன என்றால் புவனேஸ்வரி . தம்பியின் பெயர் என்ன என்றால் அருண்குமார். தம்பியை வீட்டில் வேறு பெயர் சொல்லி அழைப்போமா என்றால் விக்னேஷ் மற்றும் விக்கி என்று அழைப்போம். என் திருமணத்திற்கு முன்பே என் தங்கைக்கு திருமணமாகிவிட்டதா என்றால் ஆமாம் . என் தங்கை வேறு வகுப்பை சர்ரந்தவரை திருமணம் செய்து கொண்டாரா என்றால் ஆமாம் . ஐயர் வகுப்பை சார்ந்தவரை காதல் திருமணம் செய்து கொண்டார் . என் திருமணத்திற்கு முன்பு என் தம்பியும் தங்கையும் எங்கு பணி புரிந்தார்கள் என்றால் தங்கை கொட்டாக் லைப் இன்சூரன்ஸ் நிறுவனத்திலும், தம்பி ஆக்சிஸ் வங்கியிலும் பணிபுரிந்து வந்தார்கள் . தம்பி தங்கையின் சம்பளம் ரூ. 5,000/- அல்லது ரூ. 6,000/- என்றால் அது பற்றி தெரியாது. என் தம்பியின் மாத சம்பளம் ரூ . 5,000/- என்றாலும், நான் வேண்டுமென்றே வழக்கிற்கே

பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . சத்தியமாக எனக்கு தெரியாது. திருமணத்தின் போது எனக்கு சொந்த வீடு இல்லை என்றாலும் , போக்கியத்திற்கு தான் குடியிருந்தோம் என்றாலும் ஆமாம். அவ்விடு நரசிம்மபுரத்தில் 2 லட்சம் போகியத்திற்கு வசித்தோம் என்றால் நரசிம்மபுரத்தில் வசித்தோம். எவ்வளவு என்று தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.